**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை சபையினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 49 இற்கு இணங்க ஒரு வகுப்பைச் சேர்ந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் போது குறிப்பிட்ட சொத்துக்களின் வகுப்பை ஒரே தடவையில் மீள்மதிப்பீடு செய்யப்பட இருந்த போதிலும் அதற்கு முரணாக பகுதிகளாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டிடக் கணக்கு மீதி ரூபா 217,592,705 தொகை எனினும், அவற்றில் ரூபா 44,929,705 தொகைக்கான கட்டிடங்களின் கிரயத்திற்கு ரூபா 172,663,000 தொகைக்கான கட்டிடங்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோறிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் வருகையின் பின்னர் எதிர்காலத்தில் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 65 இற்கு இணங்க, சொத்து ஒன்றின் மீதிப் பெறுமதி பயன்தரு ஆயுட் காலத்தை கழித்து அனைத்து வருடாந்த அறிக்கையிடும் காலப் பகுதி முடிவடையும் தினத்தில் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 43,265,362 தொகைக்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 928,085 இற்கான மென்பொருள் முறைமையின் ஆக்கபூர்வமான ஆயுட் காலத்தை சரியாக மதிப்பீடு செய்யாத | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 05 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள போதிலும் சொத்தொன்றில் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட் காலம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப் பகுதி இறுதியிலும் மீளாய்வு செய்தல் செயல் ரீதியாக முடியாதுள்ளதுடன், அனைத்து மோட்டார் வாகனங்களும் ஒரே தடவையில் மீள் மதிப்பீடு செய்து 2024 ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | - மேற்படி - |

காரணத்தினால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவற்றின் பெறுமதி சூனியமாக இருந்தது. மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் அத்தியாய இலக்கம் 140 இன் படி நிறுவனம் ஒன்று அதன் வரைவிளக்கனம் செய்யப்பட்ட நலன் திட்டங்களின் தன்மை மற்றும் அந்தக் காலப் பகுதியில் அந்தத் திட்டங்களின் நிதித் தாக்கங்களின் மாற்றங்கள் தொடர்பாக நிதிக்கூற்றினை பயன்படுத்துவோருக்கு மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு தகவல்கள் வெளிப்படுத்த வேண்டும். மேலும், அத்தியாய இலக்கம் 141(ங) இன் படி சம்பள அதிகரிப்பு விகிதாசாரம் தொடர்பாக கழிவு சதவீதம் எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதென வெளிப்படுத்தியிருக்கவில்லை. இங்கு கணக்கீட்டுக் கொள்கை மாற்றமடைவதனால் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கத்தை குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன்படியும் செயற்பட்டிருக்கதவில்லை. | நியமத்தின் 11(ங) படி வெளிப்படுத்தாமை சபையின் வழுவொன்றாகும். எதிர் காலத்தில் இவ்வாறானவைகள் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டில் 99 ஆண்டுகளுக்கான குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த தலைமை அலுவலக காணி 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 365,000,000 இற்கான பெறுமதிக்கு மீள் மதிப்பீடு செய்து நடைமுறை ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் | இந்தக் காணி 1992 ஆண்டு தொழிற்பாட்டுக் குத்தகை (நிதி) அடிப்படையில் பெறப்பட்ட ஒன்றாக காணப்படுவதுடன், "இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் - 12 தொழற்படு குத்தகை" இல் 84 ஆம் அத்தியாயத்தின் படி | நிதிக்கூற்றுக்களுக்கு சரியான பெறுமதியை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. மேலும், குத்தகை ஆதனங்களின் பெறுமதி தனியாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், காணிகளின் பெறுமதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் காணியின் குத்தகைப் பெறுமதி ரூபா 4,350,000 தொகையாக காணப்பட்டதுடன், வருடாந்த காலத் தேய்மானப் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 1,318,182 தொகை எனினும், அந்தப் பெறுமதியினை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஜனவரி 01 திகதி முதல் ஆரம்பமாகும் உடன்படிக்கைகளுக்காக காலத் தேய்மானம் கட்டாயமாக இருக்கவில்லை. | |
| (ஆ) | ரூபா 4,085,019 தொகை பெறுமதியான 30 வருட குத்தகையில் பெற்றிருந்த ஹோமாகம பிடிபன காணி, காணிக் கணக்கின் கீழ் காட்டப்பட்ட போதிலும் குத்தகை காணிக் கணக்கிற்கு எடுத்து வருடாந்தம் காலத் தேய்மானம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொண்ட பின்னர் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் நாட்குறிப்புப் பதிவு ஒன்றின் மூலம் கடந்த ஆண்டுகளுக்கான காலத் தேய்மானத்தின் எண்ணிக்கையை கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களுக்கு சரியான பெறுமதியை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நவதிகன்தய புனர்வாழ்வு நிலையக் காணி 2016 மார்ச் 04 திகதியில் உள்ளவாறு குத்தகை உடன்படிக்கையின் படி குத்தகை பெறுமதி ரூபா 13,062,750 தொகையாக காணப்பட்டதுடன், வருடாந்த அடிப்படையில் குத்தகை செலுத்துதல் மேற்கொண்டு செலுத்திய குத்தகை பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. குத்தகைப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் குத்தகை காணிகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | இது 2016 மார்ச் 03 திகதி வரை 30 வருடங்களுக்காக பெறப்பட்டு அதன் பின்னர் மீண்டும் 2016 மார்ச் 04 திகதி முதல் 2046 மார்ச் 03 திகதி வரை 30 வருடங்களுக்காக பெற்றிருந்த மேற்கூறிய இரண்டாவது உடன்படிக்கையின் படி தொழிற்பாட்டுக் குத்தகை 05 வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்படுவதுடன், கொடுப்பனவு வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. | குத்தகை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணிகளின் கீழ் ராஜகிரிய தலைமை அலுவலக் காணி, ஹோமாகம பிடிபன காணி மற்றும் நவதிகன்த காணிகள் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் நவதிகன்த காணிக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 905,635 தொகை மற்றும் ஹோமாகம | நிதி தொழில்படு குத்தகை அடிப்படையில் சபையினால் பெற்றிருந்தது தலைமை அலுவலக காணி ஹோமாககம பிடிபன காணி மற்றும் நவதிகன்த மாஹேன காணி ஆகிய மூன்று காணிகள் மாத்திரமே. எனினும், ஹோமாகம் பிடிபன காணிக்காக | கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட அனைத்துக் காணிகளுக்குமான காலத் தேய்மான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | காணிக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 107,627 இற்கான பெறுமதிகளுக்காக மாத்திரம் காலத் தேய்மானச் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.3 இன் கீழ் அனைத்து குத்தகை காணிகள் தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதுவரை தொழிற்படு குத்தகை உடன்படிக்கைக்கு அணுகியிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 2.3 இன் கீழ் காலி நிலையத்தின் காணி மற்றும் தலன்கம நிலையத்தின் காணி தொடர்பாக வெளிப்படுத்தலொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | வேண்டும். |
| (உ) | அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கட்டிடத்தில் பொறுத்தப்பட்டிருந்த மின்உயர்த்தி திருத்த வேலைக்காக ரூபா 1,764,690 தொகைக்கான பெறுமதிக்காக செயலாற்றுகை பிணைமுறியொன்று பெற்றுக்கொண்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்தப் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் திருத்த வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக இயந்திரங்கள் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் முற்பணங்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு பதிலாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். 2024 ஆண்டின் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலவுகள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கத்தின பெறுமதி ரூபா 42,856,163 இற்கான மீதியில் சேவையில் காணப்படாத நான்கு உத்தியோகத்தருக்கான ரூபா 1,973,454 இற்கான பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,973,454 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சேவையில் காணப்படாத 04 உத்தியோகத்தர்களுக்கான ரூபா 1,973,454 இற்கான "பணிக்கொடை ஏற்பாடுகள் ஊழியர் பட்டியலில்" உட்படுத்தப்பட்டிருந்த பெறுமதியின் வழு 2024 ஆண்டில் சரி செய்வேன். | நிதிக்கூற்றுக்களின் சரியான பெறுமதிகள் உட்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.5 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கில் ரூபா 295,214 இற்கான வரவு மீதியொன்று இரண்டு வருட வீச்சு முதல் காணப்பட்டது. | மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கு மீதி கூடிய விரைவில் இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மூலதன ஒதுக்கம் | 65,503,711 | பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் | மூலதன ஒதுக்கம் மீதி 2016.12.31 திகதி முதல் மாற்றமின்றி காணப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் இந்த மீதி உருவாகியிருந்த முறை தெளிவாக ஏடுகளின் மூலம் கண்டறிய முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. | மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| வைப்புச் சான்றிதழ்கள் | 566,263 | வைப்புச் சான்றிதழ்கள் | இந்த வைப்புக்களுக்கான சான்றிதழ்கள் கடந்த காலத்தில் காணாமல் போயிருந்தது. | மீதியை அதற்குரிய நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்
### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்ட முற்பணக் கணக்கிலிருந்த ரூபா 1,434,534 இற்கான வரவு மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக எழுத்துமூல தகவல்கள் பொறுப்புச் சொல்ல வேண்டிய பிரிவுகளில் காணப்படாததுடன், அவ்விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 2020/01 இன் படி அதற்குரிய சேதம் தொடர்பாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்த மீதிகளை பதிவழிப்பதற்காக அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 06/06/2024 திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்காக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | முற்பண மீதியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 01 இலக்க போதைப் ஔடதங்கள் மற்றும் உளநிலை மாற்றும் மருந்துகளை சட்ட விரோதமாக கடத்தலுக்கு எதிரான உடன்படிக்கைச் சட்டத்தின் பிரிவு 18 இன் உப விரிவு 31 மற்றும் அரசியல் யாப்பின் 44 பிரிவின் (2) பந்தியின் படி ஆக்கப்பட்ட கட்டளை இலக்கம் 1653/07 மற்றும் 2010 மே 10 திகதிய அதிவிஷேட வர்த்தமானி | | | |
| i. | IV ஆவது பகுதியின் வளாகங்களை பதிவு செய்தலுக்கான கட்டளை 09 | பண்டங்களை இறக்குமதி செய்வதற்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்குரிய கருமங்களை மேற்கொண்டு வரும் வளாகங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நாள் முதல் ஒரு மாதத்தினுள் அனைத்து அனுமதிப்பத்திரதாரர்களினாலும் அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், 16 வளாகங்கள் பதிவு செய்யப்பட்டு 10 இற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதிகார சபையின் அங்கத்தவர்கள் குறைந்த அளவு 03 மாதங்களுக்கு ஒரு முறை ஏனும் அனுமதிப்பத்திரதாரரின் பதிவு செய்யப்பட்ட வளாகத்திற்கு வந்து செயற்பாடுகள் தொடர்பாக கண்காணிப்பு செய்ய வேண்டியிருந்த போதிலும் பண்டங்கள் களஞ்சியப்படுத்தியுள்ள முறை, உபகரணப் | முன்னோடி கட்டுப்பாட்டு அதிகார சபையில் கடமையாற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செய்முறை அடிப்படையில் இறக்குமதி அனுமதிப்பதிரதாரர்களின் 51 வளாகங்கள் பரிசோனை செய்யக்கூடியதாக இருந்ததுடன், அந்த உத்தியோத்தர்கள் இருவரின் உச்சமட்ட கொள்திறனாக காணப்படுவதனால் நிலவுகின்ற ஊழியர் பற்றாக்குறையை நிறப்பிய பின்னர் மீதியான வளாகங்களை பரிசோதனை செய்வதற்கு முடியுமாக இருக்கும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்பாட்டினை பேணிச்செல்லும், புத்தகங்கள் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆண்டின் 91 அனுமதிப்பத்திரதாரர்களில் 51 வளாகங்கள் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டிருந்தது. | | |
| ii. | VI ஆவது பகுதி வியாபாரிகள் மற்றும் இறுதிப் பயன்பாட்டாளர்கள் | அறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களை விற்பனை செய்வதற்கு கருத்துடைய அல்லது அந்தப் பண்டங்களை பயன்படுத்துவதற்கு கருத்துடைய இறுதிப் பயன்பாட்டாளர்களினால் முன்னோடி அதிகார சபைக்கு விண்ணமொன்று சமர்ப்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். 2023 ஆண்டில் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் பதிவு செய்தல் பதிவேட்டு அவதானிப்பு மேற்கொள்வதற்கு வசதியான முறையில் அறிக்கைகள் வெவ்வேறாக தரவு முறைமைக்கு உள்ளீடு செய்திருக்கவில்லை. | தரவு முறை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், வரையறுக்கப்பட்ட பதவியணியுடன் அவற்றை நாளதுவரையாக உரிய முறையில் மேற்கொள்வதற்கு இயலாமல் இருந்தது. அவ்வாறாயினும், அனைத்துத் தரவுகளும் வெவ்வேறாக புத்தகங்களில் பதிவு செய்யப்படுவதுடன், அவை ஆவணங்கள் என பேணப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| iii. | கட்டளை 5 பந்தி | அதிகார சபையின் கருமங்கள் மற்றும் செய்பணிகளை நிறைவேற்றுதல் மற்றும மேற்கொள்வதற்காக தேவைப்படும் செயலாளர் ஒருவர் மற்றும் ஏனைய உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அதிகார சபையினால் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னோடி அதிகார சபைக்கு 2023 ஆண்டு இறுதி வரை தேவைப்படக்கூடிய பதவியணியினர் ஆட்சேர்ப்பு | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் இலக்கம் DMS/1683/Vol-III மற்றும் 2017.01.11 திகதிய கடிதத்தின் மூலம் முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகார சபைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த செயலாளர் பதவி அகற்றப்பட்டிருந்ததுடன், இரசாயனவியலாளர் பதவி பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் முன்னோடி இரசாயனம் என மாற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தது. | 05 விஞ்ஞான ரீதியான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி முடிவடைந்திருந்ததுடன், அந்த ஆட்சேர்ப்பு நடைபெற்ற பின்னர் சபையின் முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு அந்த அலுவலர்கள் இணைக்கப்படவுள்ளனர். | |
| (ஆ) | 2008 இன் 01 இலக்க போதைப் ஔடதங்கள் மற்றும் உளநிலை மாற்றும் மருந்துகளை சட்ட விரோதமாக கடத்தலுக்கு எதிரான உடன்படிக்கைச் சட்டத்தின் கட்டளை 8 பந்தி மற்றும் கட்டளை 10 பந்தி | அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகார சபையின் ஆளுகைச் சபை 2023 ஆண்டு ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கூடியிருந்ததுடன், கட்டளை 10 பந்திக்கு இணங்க அதன் கருமங்கள் தொடர்பாக முன்னோடி அதிகார சபையின் ஆளுகைச் சபை அங்கத்தவர்களினால் மீளாய்வு செய்வதற்காக முன்னோடி அதிகார சபையின் சபை குறைந்த கூட்ட எண்ணிக்கையையேனும் நடாத்தியிருக்கவில்லை. | இந்தக் காலப் பகுதியில் கொள்கைசார் தீர்மானங்கள் எடுப்பதற்காக போதியளவு விடயங்கள் உருவாகியிருக்காததுடன், சபைப் பத்திரங்கள் ஏதும் சமர்ப்பித்திருக்காமையால், நிறுவனத்தின் அன்றாட கருமங்கள் சிறப்பாக நடைபெற்றமையால் கூட்டக்குழுவின் தேவைப்பாடுகள் ஏற்படாததுடன், அவ்வாறு ஏற்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு தேவையான தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகியுள்ள நபர்களுக்கு (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டத்திற்கு இடை நேராக வெளியிடப்பட்ட 2010 மே 12 திகதிய இலக்கம் 1653/19 – 2010 வர்த்தமானியின் கட்டளை இலக்கம் 2 | ஔடதங்களுக்கு அடிமையாகியவர்களை அரவணைப்பதற்காக மற்றும் புனர்வாழ்வு செய்யும் கருமங்களுக்கான கட்டளைக்கு இணங்க அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாமல் பேணிச் செல்ல முடியாதிருந்த போதிலும் 2023 ஆண்டு இறுதியளவில் 26 தனியார் சிகிச்சை நிலையங்கள் நாட்டில் காணப்பட்டதுடன், 13 தனியார் புனர்வாழ்வு நிலையங்கள் பதிவு செய்தலை நாளதுவரை | தனியார் புனர்வாழ்வு நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது, அதற்குரிய பாதுகாப்பு விடுவித்தல் அறிக்கை சிக்கல் ஏதும் காணப்படவில்லை என பொதுத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்திய பின்னராக இருப்பதனால் 13 தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு 2023 ஆண்டில் அனுமதிப்பத்திரம் | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ள கட்டளையின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆக்குவதற்காக பாதுகாப்பு இசைவு பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வழங்குவதற்காக பாதுகாப்பு இசைவு அறிக்கை இதுவரை கிடைத்திருக்கவில்லை. அது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், அந்த அறிக்கை கிடைத்த பின்னர் மீதியான 13 தனியார் சிகிச்சை நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கல் மேற்கொள்ளப்படவுள்ளது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 880 | நிறுவனத்தின் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டிருக்காததுடன், (அதிகாரம் 612) அரசாங்க உத்தியோகத்தருக்கான பிணைக் கட்டளைச் சட்டத்தின் படி பிணை வைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள 612 ஆவது பிணை கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆன அரச உத்தியோகத்தர்கள் பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும் செய்முறை சார் இதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காசாளர் பதவியொன்று காணப்படாதுடன், பணம் சேகரித்தல் மற்றும் பணம் கொடுப்பனவிற்கு பொறுப்பாக முகாமைத்துவ உதவியாளர்களாக காணப்படுவதனால் அது அவர்களுக்கு சாட்டப்பட்ட மேலதிக கடமையொன்றாக காணப்படுவதனால் பிணை வைக்கும் படி கட்டளையிட முடியாதுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | காப்புறுதித் திட்டம் செயற்படுத்துதல் | 2011 ஆண்டின் பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 4.616 அங்கீகாரத்தின் மீது செயற்படுத்தப்பட்டிருந்த இலங்கை காப்புறுதிக் | ஊழியர் காப்புறுதித் திட்டம் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் நடைபெற்றது. | காப்புறுதித் திட்டத்திற்காக பணிப்பாளர் சபையின் மற்றும் திறைசேரியின் |

கூட்டுத்தாபனத்துடனான காப்புறுதி நலன் திட்டம் 2022 ஆண்டில் நிதி ஏற்பாடு காணப்படாமையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஆண்டு பாதீட்டு ஏற்பாடு ரூபா 5 மில்லியன் வரையறையுள் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களுடன் காப்புறுதி நலன் திட்ட உடன்படிக்கை 2023 ஒக்தோபர் 01 திகதி முதல் 2024 செப்தம்பர் 30 வரையான காலப் பகுதி தொடர்பாக ஒரு ஊழியரின் வருடாந்த தவணைப் பெறுமதி ரூபா 26,645 தொகையும், சபையில் ஒரு வருடத்தை பூர்த்தி செய்துள்ள 201 ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்கள் உட்பட மொத்த அங்கத்தவர்கள் 597 ஐ உள்ளடங்கக்கூடியவாறு தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றுடன் ரூபா 5,677,525 இற்கான வருடாந்த பெறுமதிக்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. இதற்காக சபையின் உத்தியோகத்தர்களிடம் நிதிப் பங்களிப்பு ஏதும் பெற்றுக்கொண்டிருக்காததுடன் , கணக்காய்வுத் திகதி அளவில் காப்புறுதி நலன்கள் என ஊழியர்களுக்கு ரூபா 2,071,063 தொகை காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறாயினும், புதிய காப்புறுதித் திட்டத்திற்காக திறைசேரியின் பாதீட்டுத் திணைக்களத்தின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2022 ஆண்டிற்கான காப்புறுதிக்காக செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையும் முன்னர் வழங்கப்பட்ட கூறுவிலையை விட மிகையாக காணப்பட்டதால் அந்த சலுகைகளுடனான வேறு முகவரொன்றினை தெரிவு செய்வதற்காக பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு பெறுகை பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அந்த பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளும் போது பெறுகைக்காக தலைவர்கள் மாறுதல் மற்றும் நிலவுகின்ற நிதியாண்டு முடிவடைதல் ஆகிய விடயங்கள் காரணமாக இந்த காப்புறுதி உள்ளடக்கம் குறிப்பிட்ட வருடத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும், தொடர்ந்து வரும் ஆண்டின் போது மீண்டும் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2011.03.30 திகதி நடைபெற்ற 348 ஆவது சபைக் கூட்டத் தீர்மானத்தின் படி சபையின் உத்தியோகத்தர்களுக்கு சுகாதார காப்புறுதி வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தமையால் மீண்டும் சபை பத்திரமொன்று அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,248,627 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 48,359,337 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 46,110,710 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு அரச பங்களிப்பு முன்னைய ஆண்டை விட ரூபா 28,867,000 இனால் அதிகரித்திருந்தல் மற்றும் ஏனைய பலவின வருமானங்கள் ரூபா 15,500,560 இனால் அதிகரித்திருத்தல் முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஏப்ரல் 30 திகதி முப்பது ஆண்டுகளுக்கான குத்தகை அடிப்படையின் மீது ரூபா 4,085,018 இற்காக பெற்றுக்கொண்டிருந்த ஹோமாகம பிடிபன காணி 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறுதியாக பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த கருமம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்திக்காததுடன், 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் காணிக்குரிய குத்தகை காணியுறுதி பெற்றுக்கொண்டிருக்கவில்லை. இந்தக் காணி ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | அரச தனியார் கூட்டு முயற்சியுடன் இந்தக் காணியை கரைசேறும் நிலையமொன்று அல்லது அறிவுரை நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக செயற்திட்ட யோசனையொன்று தயாரிக்கப்பட்டு வேண்டுகோளொன்றுடன் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சமர்பிக்கபட்டு கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்தக் காணியை ஆக்கபூர்வமான கருமம் ஒன்றுக்கு பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த நிலையத்திற்கு பிக்கு ஒருவரின் தனிப்பட்ட பண நன்கொடை ஒன்றின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுமார் ரூபா 12,800,000 தொகை பெறுமதியான கட்டிடம் ஒன்று மற்றும் சர்வதேச நிறுவனம் ஒன்றின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 7,844,963 தொகை பெறுமதியான கட்டிடம் ஒன்று சிகிச்சை மற்றும் | நிதி அமைச்சின் மற்றும் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் போனது. பிரதமர் பதவியணி மீளாய்வுக் குழுவின் | நன்கொடையாக கிடைத்த கட்டிடங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புனர்வாழ்வு அலுவல்களுக்காக பயன்படுத்தக் கூடியவாறு அனைத்து தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் அடங்கியிருந்த போதிலும் அந்தக் கட்டிடத்தில் ஔடதங்களுக்கு அடிமையாகிய ஆட்களை புனர்வாழ்வு அலுவல்களுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. இந்தக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு 2021 ஆண்டில் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பதவியணியினரை இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையே அதற்கு காரணமாகும். | அங்கீகாரம் மற்றும் 2023.09.22 திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் கிடைத்த அங்கீகாரத்தின் படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையாகிய ஆட்கள் (சிகிச்சை புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தை திருத்துவதற்காக 2022 ஜனவரி 24 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை பத்திரம் அமப/21/2279/303/176 மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சட்டத்திற்குரிய திருத்த அலுவல்களை பூர்த்தி செய்து அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதி அமைச்சின் மூலம் இந்தச் சட்டம் திருத்தப்படுவதுடன், சட்ட வரைஞரினால் இறுதி திருத்தப்பட்ட சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்புடன் 2023.05.02 திகதி நீதியமைச்சு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் திருத்த அலுவல்கள் விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலகம் மற்றும் மாகாண பிராந்திய அலுவலகங்கள் உட்பட 374 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 205 ஆக காணப்பட்டது. அதன் காரணமாக வெற்றிட எண்ணிக்கை 169 ஆகும். இந்த வெற்றிடங்களில் ஆறு பதவிகள் தொடர்பாக 29 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2023 ஆண்டு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்ட போதிலும், நிதிப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் | சபையின் அங்கீகரிப்பட்ட பதவியணி எண்ணிக்கை 374 ஆகும். (33 பிராந்திய அலுவலகங்கள் உட்பட) 2023.11.03 திகதிய வர்த்தமானிக்கு இணங்க பணிப்பாளர் நாயகம் பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தருக்காக சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. நிருவாக பணிப்பாளர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட | பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் நிருவாகப் பதவி உட்பட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு அலுவல்களை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நாயகப் பதவி மற்றும் நிருவாக பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு அலுவல்கள் விரைவாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி தகைமையுள்ள விண்ணப்பதாரி ஒருவருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்திருக்கவில்லை.<br>சபையின் செயலாளர் / சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டதுடன், அந்த உத்தியோகத்தர் வேலை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்தார். விஞ்ஞான ரீதியான உத்தியோகத்தர் பதவிக்காக 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2024.06.13 திகதி நியமனம் வழங்கப்படவுள்ளது. அறிவுரை உதவியாளர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு போட்டிப் பரீட்சை நடாத்துவதற்கு பொலிஸ் பரீட்சை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சட்ட விரோதமாக போதைப் பொருட்கள் உற்பத்தி, போக்குவரத்து, விற்பனவு மற்றும் பயன்படுத்தலுக்கு எதிராக சட்டத்தை ஆக்கபூர்வமாக வினைப்படுத்துவதற்காக தேசிய போதைப் பொருள் ஆய்வுகூடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பௌதீக முன்னேற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தரவுகளின் படி 2023 ஆண்டில் எதுவித முன்னேற்றமும் பெற்றிருக்காத உத்தேச நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்டிருந்ததுடன் 3 நிகழ்ச்சித் திட்டங்களும் 50 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடைப்பட்ட 5 நிகழ்ச்சித்திட்டங்களும் காணப்பட்டது. | நிறுவனத்தை ஒன்றிணைக்க முடியாமல் போதல், போதைப் பொருள் ஆய்வுகூடத்தில் போதியளவு விஞ்ஞான ரீதியான உத்தியோகத்தர் காணப்படாமை, பகுப்பாய்வு அலுவல்களுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து மாதிரிகள் சமர்ப்பித்திருக்காமை. பரிசோதனை உபகரணத் தொகுதிகள் ஆய்வுகூடத்திற்கு கிடைக்கப் பெறாமை குறைந்த முன்னேற்றத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடும் போது ஏற்பாடுகள் மற்றும் உரிய ஏனைய அமைப்பு அலுவல்கள் திட்டமிடப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறுவர் மற்றும் இளைஞர்கள் போதைப் பொருள் பயன்பாட்டிற்கு அனுகுவதை தடுப்பதற்காக நிவாரணக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் கூட்டிணைந்த திட்டத்தின் 26 நிகழ்ச்சித் திட்டங்களில் 04 நிகழ்ச்சித் திட்டங்கள் 75 சதவீதத்திற்கு குறைவாக பௌதீக முன்னேற்றம் ஒன்றை பெற்றுக்கொண்டிருந்தது. | போதியளவு பதவியணியொன்று காணப்படாமை, நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமை அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிகள் நிறுத்தப்படல் குறைந்த முன்னேற்றத்தை பெறுவதற்காக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த காரணங்களாகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடும் போது ஏற்பாடுகள் மற்றும் உரிய ஏனைய அமைப்பு அலுவல்கள் திட்டமிடப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |